## ரஷ்யா



# அற்புதங்களின் பள்ளி

*அது, சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியில் நடந்த மற்றொரு அற்புதமென உணர்ந்தார்.*

சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளி, அற்புதங்களின் ஒரு பள்ளி என்று சொல்லுகிறார் ருவிம்.

ரஷ்யாவில், சாவோவ்ஸ்கி அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழக வளாகத்தில்தான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. மூன்று வருடங்களுக்குமுன் எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையால் அப்பள்ளி பயனடைந்தது.

ஆனால், அந்தப் பள்ளியின் சிறப்பு அதுவல்ல என்று ருவிம் சொல்லுகிறார்.

அந்தக் காணிக்கை சேகரிக்கப்படுவதற்கு முன்னரே, அவரும் அவரது மனைவி அலியோனாவும் சாவோவ்ஸ்கிக்குச்சென்றிருக்கிறார்கள்; அந்த நகரத்தில்தான் அந்தப் பள்ளி அமைந்துள்ளது. அந்த இளம் தம்பதியருக்கு குழந்தைகள் இல்லாமலிருந்தது. ஆனால் அலியோனாவின் நண்பர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளை சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியில் சேர்த்திருந்தார்கள். அந்தப் பிள்ளைகளின் வாழ்வில் அந்தப் பள்ளி நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியதைக் கண்டு அலியோனா வியப்படைந்தார்.

“நமக்கும் பிள்ளைகள் பிறந்தால், இந்தப் பள்ளியில் சேர்த்தால் நன்றாக இருக்கும்” என்று சொன்னார்.

ருவிம் அதற்குச் சம்மதித்தார். தென் ரஷ்யாவில் அவர் போதகராகப் பணியாற்றிய இடத்தில் அட்வென்டிஸ்ட் பள்ளிகள் இல்லை.

அவர்கள் இருதயங்களில் ஒரு கனவுத் திட்டம் உருவானது.

ஆனால் அந்தக் கனவு சாத்தியமற்றதுபோலத் தோன்றவே, சீக்கிரத்தில் மறந்துபோனார்கள்.

ஆறு வருடங்கள் கடந்தன; சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியின் முதல்வர் ருவிமை அழைத்தார். அந்தப் பள்ளிக்கு ஒரு போதகர் தேவைப்பட்டார். அதனால் குடும்பத்தோடு அந்தப் பள்ளிக்கு வர முடியுமா என்று முதல்வர் கேட்டார்.

சாத்தியமற்றதுபோலத் தோன்றிய கனவு ருவிமுக்கு உடனடியாக நினைவுக்கு வந்தது. அவருக்கும் அலியோனாவுக்கும் மூன்று மகன்கள் இருந்தார்கள்; அவர்களுடைய மூத்த மகன் முதலாம் வகுப்பில் சேரவேண்டிய சரியான நேரத்தில் அவர்கள் சாவோவ்ஸ்கிக்கு குடும்பத்துடன் சென்றார்கள்.

ருவிமைப் பொறுத்தவரை, அது ஓர் அற்புதமாக இருந்தது. அவரது மகனை ஒரு அட்வென்டிஸ்ட் பள்ளியில் படிக்க வைக்க முடிந்தது.

பள்ளியாண்டு ஆரம்பித்து இரண்டு வாரங்களில், மாலையில் சிறுவர்கள் வேதாகமத்தை அறிந்துகொள்வதற்கான ஒரு குழுவை ருவிம் ஆரம்பித்தார். அதில் கலந்துகொள்வது கட்டாயமல்ல; ஆனால் அதில் கலந்துகொள்பவர்களுக்கு கூடுதல் சலுகை வழங்கப்படும்.

வியாழக்கிழமை தோறும் நடைபெற்ற அந்த 45 நிமிட வேதாகமக் குழுவிற்கு, முதல் வாரத்தில் ஆறு பிள்ளைகள் வந்தார்கள்; பள்ளியில் மொத்தம் 210 பிள்ளைகள். சிறுவர்களும் சிறுமிகளும் வகுப்பறையில் வட்டமாக உட்காரந்து படிப்பார்கள்.

அட்வென்டிஸ்ட் சபையின் கோட்பாடுகளில் ஒன்றைப் பற்றி ருவிம் வகுப்பு எடுத்தார். கேள்விகள் கேட்பார், சிறுவர்கள் வேதாகமத்தைத் திறந்து பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு, வீட்டுப் பாடங்களை மின்னஞ்சல்களில் அனுப்பிவைப்பார்; அவர்கள் அவற்றைச் செய்து, திருப்பி அனுப்பவேண்டும்.

வேதாகமக் குழுபற்றி மற்ற சிறுவர்களும் கேள்விப்பட்டு, சேர்ந்ததால், அந்தக் குழு வளர்ந்தது. அவ்வாறு சேர்ந்த சிறுவர்களில், போதைப் பொருளை மூக்கால் நுகர்கிற பழக்கமுடைய ஒரு சிறுவனும் இருந்தான். அந்தப் பழக்கத்தை விடவில்லை என்றால், பள்ளியிலிருந்து நீக்கப் போவதாக ஆசிரியர்கள் அவனை எச்சரித்திருந்தார்கள். அவன் தன் சொந்த விருப்பத்தால் வேதாகம ஆராய்ச்சி குழுவிற்கு வந்திருந்தான்.

வேத விஷயங்களைக் கற்றுக்கொண்ட பிறகு, அந்தப் பழக்கத்தை விட்டான்; குழுவிலேயே மிகவும் சுறுசுறுப்பான, ஆர்வமிக்க மாணவனாக மாறினான்.

பருவத்தேர்வின் முடிவில், அந்தக் குழுவைச் சேர்ந்த ஐந்து சிறுவர்கள் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். நான்கு சிறுமிகளும் ஒரு சிறுவனும் ஞானஸ்நானம் பெற்றார்கள்; ருவிமிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அது, சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியில் நடந்த மற்றொரு அற்புதமென உணர்ந்தார்.

அடுத்தப் பருவ ஆண்டில், மேலும் ஏழு சிறுவர்கள் அந்தக் குழுவில் சேர்ந்தார்கள். தற்சமயம் 13–16 வயதிற்குட்பட்ட எட்டு பிள்ளைகள் ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஆயத்தமாகி வருகிறார்கள்.

அது, அந்தப் பள்ளியில் சமீபத்தில் நடந்த அற்புதமென ருவிம் கருதுகிறார். அவருக்கிருக்கிற சந்தோஷத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

‘‘சாவோவ்ஸ்கிக்கு தம் கரங்களின் கருவியாக தேவன் என்னை அழைத்து வந்ததற்காக நன்றி சொல்லுகிறேன்’’ என்று சொன்னார்.

ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ்கியில், சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியை ஆரம்பிப்பதற்கு மூன்று வருடங்களுக்குமுன் கொடுத்த பதின்மூன்றாம் வாரக் காணிக்கை உதவியது. இந்தக் காலாண்டு காணிக்கையின் ஒரு பகுதி, ரஷ்யாவின் வடக்கு ஓரத்தில் உள்ள ஸலேகார்டில் ஆவிக்குரிய மற்றும் சமுதாய மையம் ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பயன்படும். ஜூன் 29 ம் தேதி உதாரத்துவமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ“ என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, “தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்”.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, ‘குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்’.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 7, “இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்.”
- ரஷ்யாவை வரைபடத்தில் காட்டுங்கள். பிறகு மாஸ்கோவிற்கு 80 மைல்கள் (130 கி.மீ) தொலைவில் தென்பக்கத்தில் உள்ள சாவோவ்ஸ்கியைக் காட்டுங்கள். சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளி அங்குதான் இருக்கிறது. அங்கு புதிதாக பள்ளிக்கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்பட்டது. மேலும், ரஷ்யாவின் தென்தூரத்தில் உள்ள ஸலேகார்டையும் காட்டுங்கள். இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி அங்கும் பயன்படப் போகிறது.